காவல் இணை ஆணையளார், மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்,
அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: S. ராஜேஸ்வரி, இ.கா.ப

ந.க.எண்.ப.பி.I(1)/57/1576/2020 நாள்.05.03.2021
மே.ம.ஆணை எண்.250/2021

பொருள் சென்னை பெருநகர காவல் - மேற்கு மண்டலம் - பணிப்பிரிவு - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு. C.நரேந்திரகுமார், இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல், (முன்னாள் காவல் இணை ஆணையாளர் அலுவலகம், மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்) என்பரின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை அரசாணை (நிலை) எண்.80, நாள் 02.03.2016 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ)த் துறை, நாள் 02.03.2016.

2) தலைமை அலுவலக சுற்றுக் குறிப்பாணை ந.க.எண்.041769/சி.ஏ.ஆர்-1/2016., நாள் 21.12.2017.

*******

சென்னை காவல் கே-5 பெரவள்ளுர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவலர்-6539, திரு சந்திரசேகர் என்பவர் பணியிலிருக்கும் போதே 28.11.1998 அன்று இறந்துவிட்டபடியால் அவரது மகன் திரு. C. நரேந்திரகுமார், என்பவர் கருணை அடிப்படையில் வேலை கோரி 11.01.1999 ஆம் தேதி மனு சமர்ப்பித்திருந்தார். நியமனதாரர் விண்ணப்ப நாளில் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுயிருந்ததால், இக்கல்வி தகுதியின் அடிப்படையில் இவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனுமதி பெற்ற இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யலாம் என்ற கருத்துரு காவல் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு, அன்னாருக்கு கணினி விவர பதிவாளர் பணி வழங்கப்பட்டு 10.09.2005 முதல் சென்னை பெருநகர காவல் இணை ஆணையாளர், மேற்கு மண்டலத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வந்தவர், அரசாணை எண்.220/காவல்-15, நாள்.18.02.2016ன்படி 01.05.2007 முதல் கணினி விவர பதிவாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டார். பின்னர் கணினி விவரப்பதிவாளராக இருந்து பணி மாறுதல் முறையில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்று 22.08.2018 பிற்பகல் சென்னை பெருநகர காவல், காவல் ஆணையாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வந்தார். பின்னர் பணிமாறுதலில் 19.10.2018 முதல் மேற்கு மண்டல காவல் இணை ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தவர் 15.10.2020 அன்று மீண்டும் பணிமாறுதல் பெற்று காவல் ஆணையாளர் அலுவலகத்தில் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்துவருகிறார்.

2) தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் பணியினை அவரது நியமன அதிகாரியே அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணிவரன்முறை செய்யக் கோரி காவல் துறை இயக்குநரின் கோரிக்கைக்கு இணங்க கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதி தளர்வும் தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனத்தை சம்பந்தப்பட்ட நியமன அலுவலரே பணிவரன்முறை செய்து ஆணையிடலாம் என பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

3) பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் கூறியுள்ள விதிமுறைகளின்படியும் மற்றும் பார்வை இரண்டில் காணும் தலைமை அலுவலக குறிப்பாணையில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் வயது வரம்பு, கல்வி தகுதி ஆகியவற்றில் எவ்வித விதி விலக்குமின்றியும் அரசாணை நிலை எண்.560 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை நாள் 03.08..1977 மற்றும் அதன் தொடர்பான ஆணைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எவ்வித விதி தளர்வுமின்றி பணிநியமனம் செய்யப்பட்ட திரு. C.நரேந்திரகுமார், தற்காலிக இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல், (முன்னர் காவல் இணை ஆணையளார் அலுவலகம், மேற்கு மண்டலம், சென்னை பெருநகர காவல்) என்பவர் உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவருடைய பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 22.08.2018 முதற்கொண்டு பணிவரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

S. ராஜேஸ்வரி,
காவல் இணை ஆணையாளர்,
மேற்கு மண்டலம்

பெறுநர்

திரு. C.நரேந்திரகுமார், இளநிலை உதவியாளர், காவல் ஆணையாளர் அலுவலகம், சென்னை பெருநகர காவல்.

**நகல்**:

காவல் துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-04.
காவல் ஆணையாளர், சென்னை பெருநகர காவல், வேப்பேரி, சென்னை-7.
மண்டல ஆணை புத்தகம் மற்றும் நகல்-1

//உ.ந.உ.ப.அ//

முதுநிலை நிர்வாக அதிகாரி
மேற்கு மண்டலம்